20.04.2026

O.S.No. 70/2016

PW2– லட்சுமி – க/பெ. பூதத்தார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.04.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. சாட்சியிடம் முதல்விசாரணை வாக்குமூலத்தை காண்பித்து அதில் என்ன உள்ளது என்று கேட்டதற்கு அது என்னவென்று தெரியவில்லை என்று கூறினார்.

2. **நீதிமன்ற கேள்வி** – சாட்சி எதற்காக நீதிமன்றம் வந்தீர்கள் என்று கேட்டதற்கு தனது தந்தை உயில் எழுதிக்கொடுத்தது தொடர்பாக சாட்சியம் அளிக்க வந்தேன் என கூறினார். எனது சகோதரருக்கு எழுதிக்கொடுத்தது உண்மை தான் என கூற வந்தேன். தற்போது சாட்சி முதல்விசாரணை வாக்குமூலத்தில் எதற்காக கையொப்பம் செய்தேன் என்று கேட்டதற்கு மேற்கூறிய சங்கதிகளை நிரூபிப்பதற்காக கையொப்பம் செய்தேன்.

3. என் உடன்பிறந்தவர்கள் மொத்தம் 3 ஆண்மக்கள், 3 பெண்மக்கள். மூத்தவர் பெயர் வெள்ளைப்பாண்டி என்றால் சரிதான். எனது மகளுக்கு வாதியின் மகனை திருமணம் செய்தோம் என்றால் சரிதான். தற்போது நாங்கள் அனைவருமே சம்மந்திகளாக உள்ளோம். 3 ஆண்மக்கள், 3 பெண்மக்கள் வீட்டிலும் பெண் எடுத்து, பெண் கொடுத்து உள்ளோம் என்றால் சரிதான்.

4. பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். எனக்கும், எனது சகோதர, சகோதரிகளுக்கும் இடையே கருத்துவேறுபாடு கிடையாது என்றால் சரிதான். நான், எனது சகோதர, சகோதரிகளுக்கு இடையே பேச்சுவார்த்தையில் உள்ளேனா என்றால் உள்ளேன். வெள்ளைப்பாண்டி உயிருடன் இல்லை என்றால் சரிதான், அவரது மகன் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான்.

5. வழக்கு தாக்கல் செய்தபின்புதான் எனக்கு உயில் பற்றி தெரியவந்தது. நான், வாதி அழைத்தன்பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். உயில் எழுதிவைத்த காலத்தில் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 13 வயதுஇருக்கும்.

6. எனது திருமணத்தை வெள்ளைப்பாண்டி நடத்திவைத்தார் என்றால் சரியல்ல. என் திருமணத்தின்போது என் தந்தை உயிருடன் இல்லை, அவர் இறந்துவிட்டார், எனவே எனது திருமணத்திற்கு யாரும் எந்த செலவும் செய்யவில்லை. பிற சகோதரிகளுக்கு எனது தந்தை இருக்கும் காலத்தில் திருமணம் நடைபெற்றது, சிறிதளவு நகை போட்டார்.

7. எனது தந்தை 1ம் பிரதிவாதிக்கு விளை நிலம் கொடுத்தார், ஆனால் அதை என் தந்தை உயிருடன் இருந்தகாலத்தில் திரும்ப பெற்றுவிட்டார். எனக்கு உயிலில் என் தந்தை கையெழுத்து மட்டும் தான் தெரியும், பிற நபர்கள் கையொப்பம் எனக்கு தெரியாது.

8. என் தந்தை கையொப்பம் செய்த பிற ஆவணங்கள் எதுவும் என் கைவசம் இல்லை. உயில் எந்த ஆண்டு எழுதப்பட்டது என எனக்கு தெரியாது, நான் சிறுவயதாக இருக்கும்போது எழுதப்பட்டது.

9. 1ம் பிரதிவாதிக்கு சொத்து யாரும் எழுதிக்கொடுக்கவில்லை, அவர் வாதியின் பங்கில் வீடு கட்டி இருக்கிறார்.

10. வாதி எனக்கு சம்மந்தி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. என்னிடம் முதல்விசாரணையின் போது உயிலின் உண்மை நகல் காட்டப்பட்டு, முதல்விசாரணை வாக்குமூலம் தயார் செய்யப்பட்டதா என்றால் அதன் ஒளிநகல் காட்டப்பட்டது.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**